[2nd November 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து கவனிக்க வேண்டிய விஷயங்கள்வேறு. அவர்களுடைய துறைக்குப் புறம்பான விஷயங்களாக இல்லாதவற்றில், ஏதாவது தவறு நேர்ந்தால் அதை எடுத்துக்காட்டலாம். கண்டனம் தெரிவிக்கும் வகையில் ராஜினமா செய்தார்கள் என்பது முறையல்ல. மேலும், இந்தப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், வேறு பல வகைகளிலே, சட்டத்திற்கும் முறைக்கும் விரோதமாக அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள் என்று கலெக்டரே அந்தப் பஞ்சாயத்துக்கு நோட்டீஸ் கொடுத்து, "அந்தப் பஞ்சாயத்தை ஏன் ஓர் ஆண்டுக்குக் கலைக்கக்கூடாது" என்று கேட்டிருந்தார்கள். அதற்கு பதில் வரவில்லை. ஆனல், வேறு ஏதோ காரணத்தை வைத்து பஞ்சாயத்து உறுப்பினர்கள் ராஜினமா செய்திருக்கிறுர்கள்.

* 1146 கேள்வி.—**திரு. சா. ராமசாமி** : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழப்பழுவூர் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கும்படி கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

(இ) அங்குள்ள மக்கள் கணக்கீட்டின்படி மேஜர் பஞ்சாயத்தாக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) அப்படி ஒரு உத்தேசம் இப்போது இல்லை.

திரு. சா. ராமசாமி : இந்த விண்ணப்பத்தின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது அந்தப் பஞ்சாயத்தைப் பிரிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Co-operative Sugar Mill for Madurai

* **1147** *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Co-operative Sugar Mill at Madurai; and

(*b*) if so, when and where?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India have approved a proposal to set up a co-operative Sugar factory in the Madurai district. It has been decided to locate the factory in Urseri-Vavidamarudur villages in the Nilakottai taluk. The factory is in the process of organisation.

திரு. வை. சங்கரன் : அதற்காகத் தனியாரிடமிருந்து எவ்வளவு பங்குத் தொகை பெறப்பட்டது ? இதுவரை அதற்காக எவ்வளவு தொகை வசூலாகியிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுவரை 21 லட்ச ரூபாய்க்குமேல் வசூல் செய்யப்பட்டிருக்கிறது.